# இறையியல் (பாடம்-4)

தேவனின் கிருபை

கிருபை என்பது, பெறத்தகுதியற்றதை கொடுக்கும் இறைவனின் செயலாகும். இது பாவிகள் மீது அவர் கொள்ளும் அன்பின் அடையாளமாகும். தேவ நீதியின்படி பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23) ஆனால் அவர் அந்த மரணமெனும் தண்டனையைக் கொடுக்காமல், பாவிகள் பெற்றுக்கொள்ளத் தகுதியற்ற நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். இதுவே அவரது கிருபை J.I.Packer குறிப்பிட்டது போல "குற்றமுள்ள பாவிகள் மீதான தேவனுடைய இலவச அன்பே கிருபை. அதுவும் அந்த அன்பை பெற அருகதையற்றவனுக்கு கிட்டும் வரப்பிரசாதம். கடுமையாக நடத்தப்பட வேண்டியவனுக்கு, அத்தகு தண்டனையை மட்டுமே எதிர்பார்க்க வேண்டியவனுக்கு, கிட்டும் தேவனுடைய அநுக்கிரகம்."

பாவிகளை, அவர்கள் செய்கையின் பலனுக்கேற்றபடி நடத்தாமல் அதற்கு முற்றிலும் எதிரான விதத்தில் நடத்துவதே கிருபையென்றாலும் A.W.Pink சுட்டிக்காட்டியது போல, "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (Elect) மீது மட்டுமே தேவன் கிருபையாயிருக்கிறார். புழைய புதிய ஏற்பாடுகளின் எந்தவொரு வசனமும் கிருபை பொதுவாக எல்லா மனிதருக்குமான அருள் என்பதாக குறிப்பிடவில்லை. இதனால் கிருபை அவருடைய இரக்கத்தில் இருந்து வேறுபட்டது என்பதையும் அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. ஏனெனில் அவர் மனிதர் மீது இரக்கமாயிருக்கிறார் ஆனால் அவர் எல்லார் மீதும் கிருபையாயிருக்கவில்லை. ஆவரால் தெரிந்துகொள்ளப்பட்ட அபாத்திரமான பாவிகளுக்கே இவ்வருள் கிட்டுகிறது. தேவன் "எல்லார் மீதும் கிருபையாயிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டவரல்ல" யாத் 33:19, ரோமர் 9:14,23 பார்க்கவும்.

கிருபை கேட்டுப் பெற்றுக்கொள்ளக்கூடியதோ, சம்பாதித்துக் கொள்ளக் கூடியதோ அல்ல. அப்படிப்பட்டது கிருபையாயிராது. மனிதன் விரும்பி நாடாமலும் முயன்று தேடாமலும், ஜெபித்துக் கேட்காமலும் கிடைப்பதொன்று. அதுவும் அதைப் பெற எவ்விதமான தகுதியுமற்ற மக்களுக்கே கிடைப்பதாகும்.

கிருபையும் இரட்சிப்பும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டது. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8). மட்டுமல்ல கிருபை கிரியைக்கு முற்றிலும் எதிரானது. ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினாலே உண்டானதல்ல (எபே 2:9) அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி, ஒரு பங்கு மீதியாயிருக்கிறது. அது கிருபையினாலே. உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது. அப்படியல்லவென்றால் கிருபையானது

கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது. அப்படியல்லவென்றால் கிரியையானது கிரியையல்லவே (ரோமர் 11:5-6) ரோமர் 4:4-5 பார்க்கவும் (எபேசியர் 1:6-7, 2:7-9 தீத்து 2:11, 3:4-7)

தேவனுடைய கிருபை நித்தியமானது. கிருபை கொடுக்கப்படும் முன்பே அது திட்டமிடப்பட்டது. "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். (2 தீமோ 1:9)

தேவனுடைய கிருபை இலவசமானது. எவரும் அதை சம்பாதிக்க வேண்டியதில்லை. "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம்" (ரோமர் 3:24)

தேவ கிருபை சுயாதிபத்தியமுடையது. "கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கேதுவாக ஆண்டு கொண்டது (ரோமர் 5:21) A.W.Pink கிருபை ஆளவேண்டுமானால் அது சிங்காசனத்தில் இருக்க வேண்டும். சிங்காசனத்தில் இருப்பவர் சுயாதிபத்தியமுடையவர். அது கிருபாசனமாயுள்ளது (எபி 4:16).

கிருபை இயேசுவில் வெளிப்பட்டது. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும், நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார். (யோவான் 1:14) எனினும் அதன் முன் தேவன் மக்கள் மீது கிருபையாயிருக்கவில்லை என்பது அர்த்தமல்ல (ஆதி 6:8, யாத் 33:19). தேவனுடைய கிருபை கிறிஸ்துவிலேயே வெளிப்பட்டது. சிலுவையில் அதன் தாற்பரியம் புலப்பட்டது (ரோமர் 5:15-17) பார்க்கவும். 2 கொரி 8:9, அப் 14:3, 18:27, ரோமர் 4:16 யோவான் 1:16, 2 தெச 2:16 தேவன் கிருபை நிறைந்தவர். இதனால் எனக்கு எதைக் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்காமல் (நான் பாவி என்பதனால் அதற்கான தண்டனையான மரணத்தைத் தராமல்) எனக்கு எதைக் கொடுக்கக் கூடாதோ நான் எதைப் பெறத் தகுதியற்றவனோ அதை அவர் எனக்குத் தந்துள்ளார். (அதாவது நித்திய ஜீவனை)

தேவனின் பொறுமை

தேவன் வெறுமனே பொறுமையுள்ளவர் அல்ல அவர் நீடிய பொறுமையுள்ளவர் (சங்கீதம் 86:15) தயவு பொறுமை நீடிய சாந்தமுடையவர் (ரோமர் 2:4) நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருப்பவர் (ரோமர் 9:23) நீடிய பொறுமையோடே காத்திருப்பவர் ( 1பேதுரு 3:20). இரக்கத்தின் ஒரு பகுதியே பொறுமையென்றாலும் இரண்டும் ஒன்றல்ல, எனினும் இவ்விரண்டு தன்மைகளையும் வேறுபடுத்துவதும் இலகுவானதொன்றல்ல. இவ்விரண்டு தன்மைகளையும் பற்றி குறிப்பிடும் போது இக்கட்டுகளில் சிக்கித் தடுமாறும் மனிதன் மீது பரிதாபப்பட்டு கருணைபுரிவது இரக்கம். தேவனுடைய பொறுமை, குற்றவாளிகளான தண்டனைக்குப் பாத்திரமான

பாவிகள் மீது காட்டப்படுவதாகும். அதாவது அக்கிரமக்காரரை உடனடியாக தண்டியாமல் அவர்கள் மீது பொறுமையாயிருக்கிறார். “அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்களின் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே அவர் பொறுமையாயிருக்கிறார் (ரோமர் 9:23). தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவர் பொறுமையுள்ளவராயிருக்கிறார். Berkhof கீழ்ப்படியாத தீயவர்கள் மீதும் அவர் நன்மைகளை அருள்பவர். அவர்களுடைய அக்கிரம செய்கைகளுக்குத்தக்க பலனை உடனடியாக அளிக்காமல் அவர் பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்கிறார். Arthur W.Pink அக்கிரமக்காரருடைய பாவங்களுக்கு தக்கதாக அவர்களை நடத்தாமல் அவர்கள் மீதும் அவர் அன்பாயிருப்பது அவருடைய பொறுமையின் மகிமையை புலப்படுத்துவதாயுள்ளது. (அப் 14:16,17 பார்க்கவும்) (1 பேதுரு 3:20 ஒப்பிடவும்)

தேவனின் உண்மை

தேவனின் தன்மை ‘உண்மை’ என்று கூறும்போது, இது அவர் சத்தியமுள்ள தேவன் (யாத் 34:6) உண்மையுள்ளவர் (உபா 7:9) நேர்மையானவர் (எண் 23:19) என்பவைகளைக் குறிக்கும்.

மற்றைய தெய்வங்கள் எல்லாம் போலியானவையும் பொய்யானவையுமாய் இருக்கையில் (சங்கீதம் 96:5, 97:7, 115:4-8, ஏசாயா 44:9-10) தேவன் இவைகளுக்கு எதிராக நிஜமானவராக, சத்திய தேவனாக இருக்கிறார். அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன் (ஏசாயா 65:10) மெய்யான தெய்வம் (எரே 10:10, யோ 17:3) அவரே சத்தியம் (யோவான் 14:6) பொய்யுரையாத தேவன் (தீத்து 1:3, எபி 6:18) சத்தியமுள்ளவர் ( 1 யோவான் 5:20)

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். தன் உடன்படிக்கைகள் வாக்குதத்தங்களை மறுதலியாதவராக அவர் இன்றும் உண்மையுள்ளவராய், தன் வார்த்தையின்படி செயற்படுபவராய் இருக்கிறார். “பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ அவர் நிறைவேற்றாதிருப்பரோ (எண் 23:19) ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் (உபா 7:9) என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன் (சங்கீதம் 89:23) என்று கூறியுள்ளார். “நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்” (1 கொரி 1:9) அவர் உண்மையுள்ளராயிருக்கிறார். அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார் (2 தீமோ 2:13) வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் (எபி 10:23)

தேவனின் வல்லமை

தேவன் சர்வவல்லமையுள்ளவர் (ஆதி 17:1) அவர் சகலத்தையும் செய்ய வல்லவர், அவர் செய்ய நினைத்தது தடைபடாது. (யோபு 42:2). அவராலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. (எரே 32:17). நான் மாம்சமான யாவருக்கும்

தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ (எரே 32:27) என அவரே கேட்கிறார். தேவனாலே எல்லாம் கூடும் என்று இயேசுவும் தெரிவித்துள்ளார்.

மத் 19:26 தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1:37) அல்லேலூயா, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் (வெளி 19:6)

A.W.Pink தான் நினைத்தவைகளை செய்ய வல்லமையற்றவர் கடவுளாக இருக்க முடியாது. தன் சித்தத்தை நிறைவேற்ற முடியாதவர் கடவுளே அல்ல. "நம் தேவனே", தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்(தானி 4:35)

தேவனுக்கு எல்லாவற்றையும் செய்யக்கூடிய வல்லமையுண்டு என்பது உண்மையாயினும், அவருடைய சித்தம் மற்றும் அவருடைய தன்மையினால் அவருடைய வல்லமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, தன்னுடைய தன்மைக்கு முரணான காரியங்களை அவரால் செய்ய முடியாது. அவர் பரிசுத்தமானவர் என்பதினால் அவரால் பாவம் செய்ய முடியாது (யாக் 1:13) பொய் சொல்ல முடியாது (எபி 6:18). அவர் உண்மையுள்ளவர் என்பதனால் தன்னை மறுதலிக்க முடியாது (2 தீமோ 2:13) தீமையைப் பார்க்கமாட்டாதவர் (ஆப 1:13)

H.C.Thiessen தேவன் சர்வவல்லமையுள்ளவர் என்று கூறும்போது அவர் உபயோகிக்கும் வல்லமையைக் குறிப்பதல்ல. அதாவது அவர் தன்னுடைய முழுவல்லமையையும் உபயோகிப்பவர் அல்ல. மாறாக தன்னுடைய வல்லமையைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கக்கூடிய வல்லமை அவருக்கு உண்டு.

தேவன் தன்னுடைய வல்லமையை தன் சித்தத்தின் தேர்வின் அடிப்படையில் ஒரு வரையறைக்குட்படுத்தியுள்ளார். இதனால்தான் உலகின் அக்கிரமங்கள் பாவங்களையெல்லாம் (அனுமதித்தவராய்) நீக்கிவிடாமல் இருக்கிறார். அவரால் செய்ய முடியாததென்று ஒன்றுமேயில்லை. எனினும் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் எனும் சித்தம் கொண்டிருப்பவரல்ல அவர்.

இறையியலாளர்கள் சில சமயங்களில் தேவனுடைய வல்லமையை இரண்டாகப் பிரிப்பதுண்டு. ஒன்று தனித்துவமான வல்லமை, மற்றது, சாதாரணமான வல்லமை hodge இன் வரைவிலக்கணத்தின்படி முதலாவது இரண்டாந்தர ஏதுக்களின் துணையின்றி அவராலேயே செயற்படும் வல்லமை, மற்றது, இரண்டாந்தர ஏதுக்களினூடாக வெளிப்படும் வல்லமையாகும்.

எல்லாவற்றையும் செய்யக்கூடிய சர்வவல்லமை பொருந்திய தேவனை தெய்வமாகக் கொண்டிருப்பதால், நம்மால் முடியாத காரியங்களை அவருடைய உதவியினால் பெற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது (ஏசாயா 45:11-13, 46:4, எரே 32:16-44, அப் 4:24-31)

தேவனுடைய வல்லமையை நாம் பலவற்றில் காணலாம். சங்கீதம் 8:9,11:12 சிருஷ்டிப்பில் அவருடைய வல்லமை விளங்குகிறது. அவரே அதை சிருஷ்டித்தார். மனிதர்கள் எதையாவது உருவாக்குவதாயின் அதற்கு தேவையான பொருட்கள் அனைத்தும் அவர்களுக்கு தேவை. ஆனால் தேவனோ ஒன்றுமே இல்லாதிருந்தும் தன்னுடைய வார்த்தையின் வல்லமையினால் இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ள அனைத்தும் சிருஷ்டித்துள்ளார். “அவர் சொல்ல ஆகும். கட்டளையிட நிற்கும்” (சங்கீதம் 33:9) மட்டுமல்ல தான் படைத்த அனைத்தையும் தன்னுடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராயிருக்கிறார் (எபி 1:3) அவர் மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறவராயிருக்கிறார் (சங் 36:6)

தேவனின் பரிசுத்தம்

தேவன் பரிசுத்தமானவர் எனும் போது நாம் அதன் இரண்டு அம்சங்களையும் நோக்க வேண்டும். எபிரெய கிரேக்க பதங்கள், “வித்தியாசமான”, “தனித்துவமான”, “வேறு பிரிக்கப்பட்ட” எனும் அர்த்தம் தருபவை. எனவே, அவர் மற்ற உயிரினங்களை விட வேறானவர் அவற்றிலும் மேலானவர். அவர் அனைத்தையும் கடந்த, சகலவற்றிலும் அப்பாற்பட்ட அநாதித்தனி முதல் அவர் மாசற்றவர், தூய்மையானவர், எனும் கருத்தும் இதில் அடங்கியிருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. (யாத் 15:11, 1 சாமு 2:2, ஏசா 57:15, ஓசி 11:9, அவர் பரிசுத்தமானவர் என்பதனால் பாவத்தோடு சம்பந்தமற்றவர் யோபு 34:10, ஆபகூக் 1:13, ஏசாயா 6:5 இதனாலேயே அவர் பாவத்தை வெறுப்பவராயிருக்கிறார்.

பரிசுத்தம் தேவனுடைய அதிமுக்கிய குணமாகக் கருதப்பட்டது. இத்தன்மையுடையவராகவே தன்னை மக்கள் அறிந்திட வேண்டும் என தேவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சித்தங்கொண்டிருந்தார் (லேவி11:44-45, யோசுவா 24:19, 1 சாமு 6:20, சங் 22:3, ஏசாயா 40:33, எசே 39:7, ஆப 1:12) தேவன் சீனாய் மலையில் விதித்த வரையறைகள் இக்குணாதிசயத்தின் முக்கியத்துவத்தை மேலம் புலப்படுத்துவதாயுள்ளன (யாத் 19:12,13,21-25) மேலும் ஆசாரிப்பு கூடாரம் ஆலயம் என்பவற்றில் பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் எனும் பிரிவுகள் (யாத் 26:33, 1 இராஜா 6:16) நியமிக்கப்பட்ட பலிகள் (லேவி 1-7) ஆசாரியப்பணி (லேவி 8:10) கற்பனைகள் (லேவி 11:14) பண்டிகைகள் (லேவி 23) போன்றவையும் இதை வலியுறுத்துவதாயுள்ளன. புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. (யோ 17:11, எபி 12:10, 1 பேதுரு 1:15-16, வெளி 4:8). சுருங்கச் சொல்லின் இத்தன்மையே அவருடைய மற்றைய குணாதிசயங்களுக்கான அடிப்படையாயும், அவற்றை கட்டுப்படுத்துவதாகவும் உள்ளது (சங் 47:8, 89:14, 97:12).

தேவன் மட்டுமே பரிசுத்தர் (வெளி 15:4) பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர் (யாத் 15:11) இதனாலேயே சேராபீன்கள் “சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என சொல்லிக் கொண்டிருக்கின்றன (ஏசா 6:3). தேவனுடைய பரிசுத்தத்தை அவருடைய கிரியைகளில் நாம் காணலாம் (சங் 145:17) A.W.Pink

சுட்டிக்காட்டியது போல, “பரிசுத்தமே அவருடைய சட்டம்” அவரது கிரியை அனைத்தும் நல்லவைகள் (ஆதி 1:31). அதே போல அவருடைய பரிசுத்தம் அவருடைய நியாயப்பிரமாணத்தில் வெளிப்பட்டுள்ளது. அவர் பாவத்தை வெறுக்கிறவராக இருப்பதனால் அவருடைய கற்பனைகள் பாவச் செயலை எதிர்க்கின்றன. அவருடைய பரிசுத்தம் சிலுவையிலும் வெளிப்பட்டது. அவர் பாவத்தை வெறுப்பவராதலால் சிலுவையில் அதை தண்டித்தார்.

தேவன் பரிசுத்தராயிருக்கின்றபடியால், பாவிகளுக்கும் அவருக்குமிடையே பாரிய பிளவொன்றுள்ளது (ஏசாயா 59:1-2, ஆப 1:13) பாவி தேவனை விட்டுப் பிரிந்து சென்றது மட்டுமல்ல, தேவனும் அவனை விட்டு பிரிந்து சென்றார். பாவத்தின் முன் இருந்த ஐக்கியம் பாவத்தினால் முறிவடைந்ததோடு சாத்தியப்படாமலும் போனது. எனவே மனிதன் மற்றொருவருடைய பரிசுத்தத்தின் அடிப்படையிலேயே தேவனை அணுக முடியும். கிறிஸ்துவினால் இச்சிலாக்கியம் நமக்கு கிடைத்துள்ளது. (ரோமர் 5:2, எபே 2:18, எபி 10:19-20). மட்டுமல்ல பயத்தோடும் பக்தியோடும் அவருடைய பிரசன்னத்திற்கு வரவேண்டும் (எபி 12:28-29). தேவனுடைய பரிசுத்த தன்மையை பற்றிய சரியான அறிவு பாவத்தை விட்டுவிட நமக்கு உதவி புரியும். Berkhof அவர் பாவத்தை வெறுப்பவர் மட்டுமல்ல, தன்னுடைய மக்களிடம் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பவரும் கூட இதற்காகவே நம்மைத் தெரிந்துக் கொண்டுள்ளார். (எபே 1:4) என்கிறார்.

கேள்விகள்

1. தேவனுடைய கிருபைக்கும் தேவனுடைய இரக்கத்துக்குமான வித்தியாசங்கள் என்னென்ன என்பதனை இப்பாடத்தில் கற்றுக்கொண்டதிலிருந்து எழுதுக?
2. தேவனுடைய கிருபை எப்படிப்பட்டது என்பதை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?
3. தேவனுடைய பொறுமைக்கும் தேவனுடைய இரக்கத்துக்குமான வேறுபாடு என்ன என்பதை இப்பாடத்தில் கற்றுக்கொண்டதிலிருந்து எழுதுக?
4. தேவன் உண்மையுள்ளவர் என்ற அவருடைய குணாதிசயத்தை நாம் அறிந்து கொள்ளும்படிக்கு இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள வசனங்களையும் அதின் விளக்கங்களையும் கூறுக?
5. தேவனுடைய வல்லமையானது எவ்வாறு வரையறைக்கு உட்பட்டதாய் வெளிப்படுத்தப்படுகிறது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
6. தேவனுடைய பரிசுத்தம் என்பதை நீங்கள் எவ்வாறு புரிந்துகொண்டிருக்கிறீர்கள்? பரிசுத்தமே தேவனுடைய அதிமுக்கிய குணமாக கருதப்படுவதின் காரணங்களை வசன ஆதாரத்துடன் விளக்கமாக கூறுக?